
# 2017 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 4</u>

**18.01.2017** இந்த எல்லையற்ற குடும்பம் எவ்வளவு நல்ல, ஆச்சரியமான குடும்பம் ஆகும். இந்த சந்திப்பு சாதாரண சந்திப்பு அல்ல, எவ்வாறு இப்பொழுது அனைவரும் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அவ்வாறே சந்தித்து, சந்தித்து ஒன்றாகி விடுவீர்கள். சதா குஷியோடு இருக்க வேண்டும்; மேலும் குஷியை வழங்கவும் வேண்டும்!

**24.02.2017** மாலை உங்களுடைய உங்களுடைய விசேஷ நினைவுச்சின்னம் ஆகும், இந்த மாலையை அணிந்து கொண்டு சதா மாலை அணிந்தவராக இருக்க வேண்டும். இந்த ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய மாலையே இன்றைய விசேஷமான பரிசு ஆகும்! (சிவ ஜெயந்தி)

**20.03.2017** தனது சாதாரண சொரூபத்தை மாற்றி சிறிது நேரமாவது சங்கமயுகத்தின் பரிஸ்தா சொரூபத்தை அனுபவம் செய்து பாருங்கள். இது உங்களது மிகவும் சிறந்த புன்சிரிப்புடன் பிரகாசிக்கும் சொரூபமாகும்!

**10.04.2017** வீடியோ!! மிலன் நடைபெறவில்லை!


ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## 18.01.2017 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## இந்த எல்லையற்ற குடும்பம் எவ்வளவு நல்ல, ஆச்சரியமான குடும்பம் ஆகும். இந்த சந்திப்பு சாதாரண சந்திப்பு அல்ல, எவ்வாறு இப்பொழுது அனைவரும் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அவ்வாறே சந்தித்து, சந்தித்து ஒன்றாகி விடுவீர்கள். சதா குஷியோடு இருக்க வேண்டும்; மேலும் குஷியை வழங்கவும் வேண்டும்!

ஓம் சாந்தி! சகோதர, சகோதரிகளையும் இன்று பாருங்கள். இந்த எல்லையற்ற மண்டபத்தில் எவ்வளவு ஆனந்தமாக அமர்ந்திருக்கிறீர்கள், கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். அனைவரது மனதிலும் நாம் எல்லையற்ற மண்டபத்தில் எல்லையற்ற ஸ்திதியில் ஸ்திரமாயிருக்கிறோம் என்பதே உள்ளது. அது மண்டபமாயிருந்தாலும் சரி. ஒவ்வொருவரும் மண்டபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் இந்த ஹாலில் அமர்ந்து கொண்டே எல்லையற்ற ஹாலில், எல்லையற்ற சபையில், எல்லைக்குப்பட்டு அமர்ந்திருந்தாலும் எல்லைக்கு அப்பால் அனுபவத்தில் எவ்வளவு மலர்ச்சியுடன் இருக்கிறீர்கள். அனைவரது நெற்றியிலும் பாபா இருக்கிறார், பாபாவின் நெற்றியில் அனைத்து குழந்தைகளும் உள்ளனர். ஒவ்வொருவரும் எவ்வளவு அழகாக புன்சிரிக்கின்றனர். பாபாவுடைய மனதில் எனது இனிமையான குழந்தைகளே, குழந்தைகளின் மனதில் எனது இனிமையான பாபா பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு எவ்வளவு இனிமையான சந்திப்பாகும்.

ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பார்த்து ஆஹா! என்னுடைய எல்லையற்ற பரிவாரம்! அனைவரும் எல்லைக்குட்பட்டதிலிருந்து எல்லைக்கு அப்பாற்பட்டதில் வந்து விட்டனர். எங்கு நோக்கினும் நமது எல்லையற்ற குடும்பம் எவ்வளவு இனிமையாக உள்ளது. எல்லையற்ற குடும்பம். இந்த எல்லையற்ற குடும்பத்தின் இடையே ஒருவர் மற்றவர்களைப் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த எல்லையற்றதில் இவ்வாறு அமர வேண்டும் என்பதும் நாடகத்தில் இருந்தது. எல்லையற்ற இந்த மண்டபத்தில் எவ்வாறு ஒருவர் மற்றவர்களைப் பார்த்து மலர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர்! பாபா கூறிக் கொண்டிருக்கின்றார் ஆஹா! குழந்தைகளே ஆஹா! மேலும் குழந்தைகளும் கூறுகின்றனர் ஆஹா! பாபா ஆஹா! இந்த காட்சியும் (நாடகத்தில்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் குடும்பத்தினரைக் கண்டு மலர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். ஆஹா! எல்லையற்ற குடும்பமே ஆஹா! இது எல்லையற்ற குடும்பம் தானே! ஆமாம், அப்படி கை தூக்குங்கள்! எல்லையற்ற குடும்பம், எல்லையற்ற மைதானத்தில் ஒன்றாய்க் கூடியிருக்கின்றனர். இந்த எல்லையற்றதில் எவ்வளவு ஆனந்தம் கிடைக்கிறது. எல்லையற்ற குடும்பத்தைப் பார்த்து அனைவரும் எல்லையற்றதில் வந்து விட்டனர். அனைத்து எல்லையற்ற குடும்பத்தினரையும் பாருங்கள் எப்படி அமர்ந்திருக்கின்றனர். சிறிய குடும்பம் ஒன்றாய் அமர்ந்திருப்பதுப் போல! எங்கு நோக்கினும் பிரம்மா குமார், குமாரிகள்! இவ்வளவு பெரிய குடும்பத்தைப் பார்த்து பார்த்து எவ்வளவு குஷி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆஹா! எவ்வளவு நல்ல குடும்பம்! குறுகிய காலத்திலேயே இந்த குடும்பம், அன்பான குடும்பம் எவ்வாறு ஒன்றாய் இணைந்துள்ளது. ஏற்கனவே நாம் சந்தித்திருக்கின்றோம் என்று தோன்றுகிறது. இவ்வாறே சந்தித்துக் கொண்டிருப்போம்; இந்த சந்திப்பும் கூட மிகவும் அற்புதமான ஒன்று! ஒருவர் மற்றவர்களைப் பார்க்கும்போது எவ்வளவு குஷி ஏற்படுகின்றது! இவர் இன்னார், இவர் இன்னார் என்பது கூட ஆஹா! எங்கு நோக்கினும் எவ்வளவு இனிமை நிறைந்திருக்கின்றது! எல்லோருடைய முகத்திலும் யார் இருக்கிறார்? என்னுடைய பாபா! என்னுடைய பாபா! என்று பார்த்து பார்த்து அனைவரும் எவ்வளவு புன்சிரித்துக் கொண்டிருக்கின்றனர்! மறந்து விட்டவர்கள் பல நாட்களுக்குப் பிறகு சந்திக்கின்ற மாதிரி, இப்பொழுதோ அனைவரும் ஒன்றாக அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள்

எவ்வளவு இனிமையாக இருக்கிறது! அனைவரும் தங்களுக்குள் எவ்வளவு சமயத்திற்குப் பிறகு சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் இவ்வளவு பெரிய குடும்பம் கிடைத்துள்ளது இதுவே மகிழ்ச்சி! பரிவாரத்தைப் பார்த்து பார்த்து, மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா! இவ்வளவு பெரிய குடும்பம்! இப்பொழுதோ பாபா தனது இந்த மண்டபத்தைக் காண்பித்து விட்டார். தற்போது என்ன நடந்தாலும் சரி. நாம் இந்த மண்டபத்துக்குள் வந்து விடுவோம். ஆனந்தமே ஆனந்தம்! இந்த சந்திப்பு சாதாரண சந்திப்பு அல்ல! எவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு நாமும் தந்தையும் நம்மிடையே சாகார (பௌதீக) ரூபத்தில் ஒருவர் மற்றவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேலும் அவ்வாறு பார்த்து பார்த்து, மகிழ்ச்சியும் அடைந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஆஹா! ஆஹா! இந்த பாடல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. நீங்களும் நாங்களும் தற்போது தனித்தனியாக இருக்கலாம் ஆனால் தனியாக இருந்த பொழுதிலும் எங்கிருந்து எங்கே வந்து நம்முடைய சந்திப்பு நிகழ்ந்துள்ளது என்று தோன்றுகிறது. இதுவும் ஒரு சிறிய சந்திப்பு ஆனால் இவ்வாறே நாம் சந்தித்துக் கொண்டிருப்போம் என்கிற நம்பிக்கை உள்ளது. இல்லையெனில் எவ்வளவு தூரமாக உணர்வு ஏற்படுகிறது. சந்திப்பது என்பது என்ன என்பதைப் பார்த்தீர்கள். சந்திப்பைப் பார்த்து விட்டீர்கள் அல்லவா! ஆக, இப்பொழுது பிரிவது என்பது கொஞ்சம் குறைவாகத்தான் நினைவில் இருக்கும். அனைவருக்கும் இந்த சந்திப்பு மிகவும் அன்பானதாக உள்ளதல்லவா! அன்பானதாக இருக்கிறதா? இவ்வாறே அமர்ந்திருங்கள். இவ்வாறே உண்ணுங்கள் ஆனால் சரீரம் என்பது இருக்கிறதல்லவா? சூட்சும சரீரமோ இல்லை. ஸ்தூலமானதே உள்ளது.

பாப்தாதாவிற்கும் குழந்தைகளைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் என்னென்ன தோன்றுகிறது, நமக்கோ, என்னுடைய பாபா நமக்கு கிடைத்து விட்டார். அவ்வளவே! என்பதே தோன்றுகிறது. தற்பொழுது பாபாவை பார்த்து அவர் எவ்வளவு அன்பாக இருக்கிறார் என்பது புலப்படுகிறது. அன்பினுடைய பை நிறைந்து விட்டது. ஆக, இப்பொழுது அனைவரும் என்ன செய்வீர்கள்? அனைவரும் ஒருவர் மற்றவர்களோடு சந்திக்கட்டும் அவ்வாறு சந்தித்து பிறகு பிரியவும் வேண்டும்.

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இவ்வளவு நாள் பிரிந்திருப்பது என்பது எப்படி தோன்றுகிறது, எங்கு இருந்தோம், எப்படி இருந்தோம் ஆனால் இவ்வாறு சந்திப்பது பிறகு பிரிவது என்பது கூட மிக அற்புதமான நமது பாகம் (பார்ட்) ஆகும். இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் எவ்வளவு அன்பு நிறைந்ததாக இருக்கிறது, சிறிது நேரத்திற்கு பிறகு பிரிந்து விடுவீர்கள் அவ்வாறு பிரிவது நன்றாகவே இல்லை. இவ்வாறு பிறகு எப்பொழுது கூடுவோம்! என்று தானே இப்பொழுது உங்களுக்கு எண்ணம் எழுகிறது. ஒன்றாக கூடிய இந்த சந்திப்பு எப்படி இருந்தது, எவ்வாறு பிரிந்தோம் மேலும் மீண்டும் இந்த சந்திப்பின் நாட்கள் வந்து விட்டன. இவ்வாறு சந்திக்கும் இந்த நாளில் மகிழ்ச்சி உள்ளதல்லவா? மகிழ்ச்சிதானே?

இவ்வாறு சந்திப்பது அவ்வப்போது ஏற்பட்டு விட்டது. இப்பொழுது சதா சந்திப்பை நினைவு செய்து செய்து சந்திப்பே சந்திப்பாக விளங்கும். இந்த சந்திப்பு அன்பாக உள்ளதா? கை உயர்த்துங்கள், பாருங்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறது இந்த காட்சி! கேமராக்காரர்களோ தங்கள் கேமராக்களின் உள்ளே இதனை வைத்து விடுவர். தங்களிடையே இந்த சந்திப்பை நினைவு செய்தோம்; மேலும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அந்த இந்த நாள் (பாபா 25000-பேர் இன்று வந்துள்ளனர்) அனைவருக்கும் எவ்வளவு மகிழ்ச்சி! இவ்வளவு அதிகம் பேர் சந்திப்போம் என்பது சிந்தித்துக் கூட பார்க்கவில்லை ஆனால் இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று சந்திக்கக் கூடிய நாள்.

சேவையினுடைய முறை இந்தூர்: நல்லது! இந்தூர்காரர்கள் பாருங்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். தங்களது கடமையையும் செய்து கொண்டிருக்கின்றனர். எவ்வளவு அற்புதமான இந்த நாடகத்தில் இதுவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது சந்திப்பினுடைய நாளாகவும் இருந்தது. இப்பொழுதோ மீண்டும் சந்திக்க விரும்பினால் சந்திக்கலாம். இப்பொழுது உள்ளத்தில் என்ன நிறைந்திருக்கின்றது? மகிழ்ச்சி என்னும் கஜானா.

**50-நாடுகளிலிருந்து 500-இரட்டை வெளிநாட்டு சகோதர, சகோதரிகள் வந்துள்ளனர்:** கை அசையுங்கள் நல்லது! இவ்வளவு பேர் சந்திக்கவாவது செய்தோம்! எவ்வளவு சமயத்திற்குப் பிறகு

சந்திக்கிறோம். அவ்வாறு சந்தித்து சந்தித்து ஒன்றாகி விடுவோம். சந்திப்பினுடைய மகிழ்ச்சி உள்ளதல்லவா! எவ்வளவு ஆனந்தம்! கை உயர்த்துங்கள்! எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு ஆனந்தம்! பாருங்கள், இந்த டி.வியில் எவ்வளவு நன்றாக உள்ளது.

**கல்கத்தாவிலிருந்து 600-சகோதர சகோதரிகள் இன்றைய நினைவு நாளில் பூக்களினால் அலங்கரிக்க வந்துள்ளனர்:** 600-பேர் வந்துள்ளனரா இங்கோ எளிது வந்து விட்டனர், அமர்வதற்கோ நல்ல இடம் கிடைத்துள்ளது. ஒருவர் மற்றவர்களோடு சந்தித்து நன்கு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சந்திப்பு என்பதோ நிகழ்ந்து விட்டது. ஒருவர் மற்றவர்களோடு சந்தித்து மிகவும் மகிழ்ச்சியாகி விட்டனர். இவ்வாறே சந்தித்துக் கொண்டிருப்பீர்கள். இதை விட அதிகமான மகிழ்ச்சி ஏற்படும். அனைத்து குழந்தைகளும் ஒன்றாக கூடி உள்ளனர் என்றால் பாபாவுக்கும் மகிழ்ச்சியே! பாபாவிற்கு எவ்வளவு மகிழ்ச்சி!

**தாதி ஜானகி அவர்கள் சந்திக்கிறார்கள்:** (தாதிஜி பாப்தாதாவிற்கு தங்க மலரை வழங்கினார்) உங்களுக்காக இந்த தங்க மலர் (பாபா உங்களுக்காக) நமக்காக என்றால் எல்லோருக்குமாக! உங்களுக்காகவும் அனுப்பியுள்ளது அல்லவா! குழந்தைகளைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது மிகவும் நல்லது! எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் (தாதி பாபாவின் கையோடு கை கோர்த்தார்) ஒரு கை அல்ல அனைவரது கையும் பாபாவின் கரங்களில் உள்ளது. அதில் பாருங்கள், குறைவான நேரம்தான் சந்தித்தோம். அந்த நேரமாவது சந்தித்தோம் அல்லவா! பார்க்கவாவது செய்தோம் அல்லவா! ஆனால் இப்பொழுது சந்தித்துக் கொண்டிருப்போம். என்னுடைய தந்தை வந்து விட்டார் என்று சொல்லுங்கள் இப்பொழுது சந்திக்காமல் இருக்க முடியாது. இவ்வாறு சந்தித்து சந்தித்து, ஒன்றாகி விடுவோம் அனைவருக்கும் மகிழ்ச்சி! அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இதுவே பாபா விரும்புகிறார் எவ்வித கஷ்டமும் இல்லையே? நன்றாயிருக்கிறீர்கள் தானே!

**நாராயணன் தாதா மற்றும் மனோஜ் ஆகியோருடன்:** (பாபாவின் லௌகீக மகன் மற்றும் பேரன்) மிகவும் நல்லது! ஒன்றாகவே இருந்தோம் என்று தோன்றுகிறது; இவ்வாறு சந்தித்துக் கொண்டே

இருப்போம். அவ்வப்போது வந்து கொண்டிருங்கள்போதும் தற்போது இவ்வளவாவது கிடைக்கிறதே! ஏதேனும் ஒரு முறையின் மூலம் அந்த மாதிரி இடம் கிடைக்கும். அங்கு எல்லோரும் சேர்ந்து வாழ்வோம்! தற்போது அந்த மாதிரி ஒரு இடத்தை தேட வேண்டும் சரியா? இவ்வளவு பாண்டவர்கள், இவ்வளவு சக்திகள், குமாரிகள் சேர்ந்து என்ன செய்ய முடியாது. தற்போது எல்லாமே ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டுள்ளது. கொஞ்சம் கை வைத்தால் (முயற்சி செய்தால்)போதும். அவ்வளவே!

எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் மகிழ்ச்சியை பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் வேண்டும் மற்றபடி வேறொன்றும் இல்லை ஆனால் உங்களிடம் மகிழ்ச்சி நிறைந்துள்ளது அல்லவா? மகிழ்ச்சி தங்களுக்குள் வழங்கிக் கொள்வீர்கள் என்றால், வாயு மண்டலம், சூழ்நிலையே மாறிப் போய்விடும். யார் வந்து பார்த்தாலும் இது மகிழ்ச்சியின் மாளிகை என்று தென்பட வேண்டும். அனைவரும் ஆனந்தமாயிருக்கின்றனர். யாரிடமாவது சென்று கேளுங்கள், மகிழ்ச்சி இருக்கிறதா அல்லது இல்லையா? மகிழ்ச்சி என்றால் கை உயர்த்துங்கள் பார்ப்போம். பாருங்கள் அனைவரும் மகிழ்ச்சியாயிருக்கின்றனர்: மகிழ்ச்சியாயிருங்கள் அவ்வளவே! சரிதானே! பாபா கிடைத்து விட்டார், எனவே மகிழ்ச்சியாயிருங் கள். இப்பொழுது அழுவது, குமுறுவது எல்லாம் முடிந்து விட வேண்டும். தற்போது புன்சிரித்துக் கொண்டே இருங்கள். யார் யாரைச் சந்தித்தாலும் புன் சிரித்துக் கொண்டே இருங்கள். அனைவரும் புன் சிரிக்கின்றனர். இப்போது அனைவரும் சேவைக்கும் செல்லுங்கள். பிறகு அறிக்கையை (ரிப்போர்ட்) கொண்டு வாருங்கள். நாங்கள் இவ்வளவு சேவை செய்தோம்! மலர்ச்சியோடு இருங்கள், சிரித்துக் கொண்டே இருங்கள். வேலை செய்து கொண்டிருங்கள் ஆனால் பாபாவை மறக்காதீர்கள். பாபாவை மறந்தீர்களென்றால் துக்கம் அடைந்தீர்கள். எனவே, என்னுடைய தந்தை என்னுடைய தந்தை என்னுடைய தந்தை.... நானும் பாபாவும்! இப்பொழுது என்ன செய்வீர்கள்? வேலை செய்ய வேண்டும். வேலை செய்யுங்கள் ஆனால் மிகவும் மகிழ்ச்சியுடன் செய்யுங்கள். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? மகிழ்ச்சியை ஒருபோதும் இழந்து விடக் கூடாது. மகிழ்ச்சியை கையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ரமேஷ் சகோதரர்: சாந்திவன் தீவிர சிகிச்சை மருத்துவ மனையிலிருந்து அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். ரமேஷ் சகோதரர் ஆரம்ப காலத்திலிருந்தே மிக நல்ல சேவாதாரியாக இருந்திருக்கிறார் தற்போது கூட நினைவை அனுப்பியுள்ளார். உங்கள் அனைவருக்கும் அவரது நினைவு கிடைத்திருக்கும். பாபாவினுடைய எந்த குழந்தையும் கஷ்டப்படக் கூடாது என்பதே அவரது விருப்பம். என்ன செய்வது? எப்படி செய்வது என்று அப்படி கிடையாது. எப்படிப்பட்ட நாளாயினும் மகிழ்ச்சியோடு கடந்து செல்லுங்கள். மகிழ்ச்சியோடு இருப்பீர்கள் என்றால் மகிழ்ச்சி வந்து சேரும். மேலும் மகிழ்ச்சியை பிறருக்கு வழங்கி வழங்கி மகிழ்ச்சியின் மண்டலம் உருவாகி விடும். ஓம் சாந்தி.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 24.02.2017 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மாலை உங்களுடைய உங்களுடைய விசேஷ நினைவுச்சின்னம் ஆகும், இந்த மாலையை அணிந்து கொண்டு சதா மாலை அணிந்தவராக இருக்க வேண்டும். இந்த ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய மாலையே இன்றைய விசேஷமான பரிசு ஆகும்! (சிவ ஜெயந்தி)

சிவஜெயந்தியை முன்னிட்டு டைமன்ட் ஹால் முழுவதும் மாலைகளாலும் சிவ கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு உள்ளது. பாப்தாதா குழந்தைகளுடைய இந்த விசாலமான சபையைப் பார்த்து அனைத்து குழந்தைகளுக்கும் கழுத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய மாலையை அணிவிக்கின்றார்!

இன்று சிவஜெயந்தி தின நல்வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! அனைவருடைய மனதிலும் எவ்வளவு சந்தோஷம் உள்ளது? அனைவருடைய மனதிலும் பாபா வந்து விட்டார். அனைவருடைய மனதிலும் இப்பொழுது யார் இருக்கிறார்? எங்கு பார்த்தாலும் பாபா. பாபாவே தென்படுகிறார். எங்கு பார்த்தாலும் பாபாவே பாபாதான்! பாபாவே பாபாதான்! இன்று அனைவரும் மிகவும் புன்முறுவல் அடைகின்றனர் எதற்காக? பாபா சுயம் குழந்தைகளுக்கு மாலை அணிவிக்க வந்துள்ளார். பாபா கழுத்தின் மாலையை அணிவிக்கும்போது என்னவாக ஆகின்றது? இப்பொழுது ஒவ்வொருவருடைய கழுத்திலும் பாபா மாலை அணிவிக்கின்றார். மேலும் அனைத்து மாலாதாரிகளும் (மாலை அணிந்திருப்பவர்கள்)

எவ்வளவு அழகாகத் தென்படுகின்றனர். அனைவரும் ஒருவர் மற்றொருவரின் கழுத்தைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றனர். மேலும் சதா ஒவ்வொருவருக்கும் பாப்தாதாவின் தரப்பிலிருந்து மாலை கிடைத்துள்ளது. மாலையினுடைய அலங்காரத்தினால் நமக்கு மிகுந்த மகிமை உள்ளது. ஆகையினால் இன்றைய தினம் அதே நினைவுச்சின்னமானது நினைவு வருகிறது. மேலும் அனைவரும் மாலையினுடைய மணிகளை அணிந்து கொண்டு எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றனர். ஆஹா! அதிசயமாக இருக்கின்றது. அனைவரும் எங்கெல்லாம் மாலையை தொங்க விட்டு முழு ஹாலும் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் மாலையினுடைய நினைவுச்சின்னம் யாருடையது? பாபா மற்றும் குழந்தைகளினுடையது. யார் என்ன கூறினாலும் பாபாவினுடைய நினைவானது மிக மிக நன்றாக உள்ளது. பாபாவினுடைய நினைவு இருக்கவே செய்கிறது. இருப்பினும் தந்தையில்லாமல் நீங்கள் என்ன செய்வீர்கள்? இருப்பதே நினைவுச்சின்னம்தான். முதல் நம்பர் நினனவுச்சின்னம் சகோதர, சகோதரிகளுடையது, யார் உண்மையிலேயே முயற்சி செய்து தன்னைத் தானே அலங்கரித்துள்ளார்கள், இந்த ஹாலையும் அலங்கரித்துள்ளார்கள். நாலா புறமும் சந்தோஷத்தினுடைய மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு நல்ல ஒரு விழாக் கோலமாக இருக்கின்றது. இப்பொழுதே பாபா மாலைகளின் மூலமாக உங்களை அலங்கரித்து தயார் செய்து அமர்த்தியுள்ளார். ஏனென்றால் பாபாவின் கூடவே குழந்தைகளும் இருக்கின்றார்கள். பாபா கூடவே அனைத்து சகோதர, சகோதரி களுக்கும் கொஞ்சம் கூடுதலாக அலங்கரிக்க வேண்டியதாக இருக்கின்றது. உங்களுடைய மாலையானது தூரத்திலிருந்தே அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாபாவும் பார்த்து பார்த்து நாலாபக்கத்திலும் உள்ள மாலையையும் பார்த்து மிகுந்த சந்தோஷம் அடைகிறார். ஆஹா! இன்று குழந்தைகள் மாலையினுடைய மணிகளை அணிந்து எவ்வளவு அலங்காரத்துடன் இருக்கிறார்கள். இன்றைய சபை அலங்கரிக்கப்பட்டுள்ளதைப் பார்த்து பாபா சந்தோஷமடைகின்றார். ஆஹா! என்னுடைய குழந்தைகளே ஆஹா! ஒருவர் மற்றொருவரின் அலங்காரத்தைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார்கள். மேலும் பாபா எவ்வளவு சந்தோஷ மடைகின்றார். ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து. பாபா அந்த மாதிரி மகிழ்ச்சி

அடைகிறார். அதை நீங்கள் பார்க்கின்றீர்கள். இது உண்மையான மலர்களால் ஆன மாலைதான். ஆனாலும் பாபா ஒவ்வொருவரின் கழுத்தில் உண்மையான மாலையாக எதை அணிவித்தார்? ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய மாலைகளின் வரிசையைப் பாருங்கள். அனைவருடைய கழுத்திலும் அணிவிக்கப்பட்டுள்ளது மேலும் மலர்களால் எவ்வளவுதான் அலங்காரம் செய்தாலும் அல்லது செய்யவில்லையென்றாலும் அனைவருடைய வாயிலிருந்தும் ஆஹா ஆஹா! என்றுதான் வெளிப்படுகின்றது. அதுதான் மாலை. இந்த மாலை எவ்வளவு அலங்கரமாய் உள்ளது. மாலை அலங்காரம் வாய்ந்தது ஆகும். எனவே இந்த தேசத்தில் அனைத்தையும் விட மிக அதிக அலங்காரம் யாருக்கு இருக்கின்றது? பாபாவிற்கு. அனைவருடைய கழுத்திலும் பாருங்கள் மாலை இருக்கின்றது; எனவே பாபா தானே மாலையை அணிவிக்கின்றார். பொதுவாக மாலை அணிவிக்கின்றனர் அது பொதுவான விஷயமாகும் ஆனால் இந்த மாலைக்கு அர்த்தம் மிக நல்ல மகத்துவம் வாய்ந்ததாகும். இந்த மாலையானது நினைவுச்சின்னத்தின் மாலையாகும். அனைவரையும் பாருங்கள், அனைவருடைய கழுத்திலும் எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. ஒருவர் மற்றவரைப் பாருங்கள், மேலும் எவ்வளவு பேருடைய கழுத்தானது அலங்கரிக்கப்பட்டுள்ளது. அனைவருடைய கழுத்தையும் பார்த்து ஒவ்வொருவரும் எவ்வளவு சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கின்றனர் ஆஹா! ஆஹா! பாபாவும் கழுத்தினுடைய மாலையைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார் ஆஹா! அனைத்து மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டவர்களின் முகத்தைப் பாருங்கள் அனைவரது முகமும் எப்படி உள்ளது? முற்றிலும் சிவப்பு சிவப்பாக இருக்கின்றது. அந்த மாதிரி மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட ஜொலித்துக் கொண்டிருக்கின்ற மாலை அணிந்திருக்கக் கூடிய குழந்தைகள், இங்கிருந்து பார்த்தால் மாலைகள் மிகவும் ஜொலித்துக் கொண்டே இருக்கின்றது. அனைவருடைய கழுத்திலும் பாபா தரப்பிலிருந்து கிடைத்திருக்கும் மாலையானது தென்படுகிறது. அனைவருடைய கழுத்திலும் அணியப்பட்டுள்ளது. மேலும் எவ்வளவு கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருடைய கழுத்திலும் பாபா ஜொலி த்துக் கொண்டிருக்கிறார். மேலும் ஒவ்வொருத்தருடைய கழுத்தையும் பாருங்கள். எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றன: ஏனென்றால்,

மாலையானது உங்களுடைய நினைவுச்சின்னமாக புகழ் பாடப்படுகின்றது. எனவே இன்றைய தினத்தில் உங்களுக்கு பாபாவே நேரடியாக வந்து அனைவருக்கும் மாலை அணிவிக்கின்றார். பாருங்கள். இந்த மாலையானது எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றது! மாலையிடைய ஜொலிப்பானது தனிப்பட்டது. ஒருவர் மற்றொருவரின் மாலையைப் பார்த்து எவ்வளவு சந்தோஷமடைகின்றனர். இன்று முழு ஹாலும் மாலைகளின் மூலமாக மிகவும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் தன்னுடைய மாலையைப் பார்க்கின்றீர்கள் தானே! முழு ஹாலிலும் மாலைகளைப் பாருங்கள் எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. தனித்து இருந்து பார்க்க வேண்டும். இப்பொழுது எழுந்திருந்தால் மாலையைக் கண்டிப்பாக பாருங்கள். அந்த மாதிரி அலங்கரிக்கப்பட்டுள்ளது, அனைவரும் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டது எவ்வளவு அழகாக உள்ளீர்கள். இந்த மாலையானது இருக்கின்ற பொழுது மாயா தோல்வி அடைந்து விடுகின்றது. மாலையைப் பார்த்த உடனே மாயா ஓடி விடுகின்றது. மேலும் நீங்கள் வெற்றி அடைந்து விடுகிறீர்கள். ஆகையினால் இந்த ஜொலித்துக் கொண்டிருக்கும் மாலையை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் தானே! பின்னாடி இருப்பவர்கள். வலது பக்கம் இருப்பவர்கள் அனைவரும் எவ்வளவு அலங்கரிக்கப்பட்டுள்ளவர்களாக இருக்கிறீர்கள். யாருக்கு மாலைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஏனென்றால் பாபா அனைவருக்கும் மாலையின் அறிமுகத்தை கொடுத்து அமர வைத்துள்ளார். ஒவ்வொரு குழந்தையும் மாலையால் அவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில் சதா காலத்திற்கும் இந்த மாலையானது இவருடைய கழுத்தின் மணியாக விளங்கியுள்ளது. பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களா! உங்களுடைய மாலையை ஒவ்வொருவரும் கழுத்தைப் பாருங்கள் எவ்வளவு மாலையானது ஜொலித்துக் கொண்டிருக்கின்றது? அதை நீங்களும் பார்த்து சந்தோஷமடைகின்றீர்கள். எங்கு பார்த்தாலும் கூட்டம் இருந்து கொண்டிருக்கின்றது.

இன்று மாலையின் ஜொலிப்பானது அதிகமாகத் தென்படுகின்றது. ஒவ்வொருவரும் தன்னுடைய மாலையினுடைய ஜொலிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஒவ்வொருவரின் மாலையினுடைய

ஜொலிப்பை இங்கு (மேடை) வந்து பாருங்கள். ஒவ்வொருவருடைய மாலைக்கும் மகிமை உள்ளது. இவ்வளவு அலங்காரம் செய்பவர் யார்? மேரா பாபா (என்னுடைய தந்தை) எல்லாரும் என்ன கூறுகிறீர்கள்? மேரா பாபா! ஒவ்வொருவரும் முன்னாடியும், பின்னாடியும், இங்கும். அங்குமாக பார்க்கும் பொழுது மாலையானது எவ்வளவு சீக்கிரமாக வருகின்றது. மேலும் அனைவரது கழுத்திலும் வந்து அடைகிறது. அனைவருடைய கழுத்திலும் மாலையானது எவ்வளவு அழகாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் தம் தம் மாலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் மாலாதாரிகள் (மாலையை அணிந்திருப் பவர்கள்). பாபாவிற்கு இந்த மாதிரி விழாக்களில் மெல்லிய மாலையாக இருந்தாலும் மிகவும் நன்றாகவே இருக்கின்றது. இப்பொழுது பாருங்கள் நீங்கள் வந்திருக்கின்றீர்கள். சிலர் மாலையை அணிந்துள்ளீர்கள் அது தென்படுகின்றது. மாலையைப் பார்த்து ஒவ்வொருவருடைய மனதிலும் வருகின்றது. மாலையில் என்னுடைய பெயர் உள்ளது தானே. இருக்கின்றதா? யாரெல்லாம் இங்கு அமர்ந்துள்ளீர்களோ அனைவருக்கும் மாலையில் பெயர் உள்ளதா? கையை உயர்த்துங்கள். அனைவருக்கும் நிச்சயம் இருக்கிறது மாலையை நமக்காகவே பாபா உருவாக்கியுள்ளார். எனவே, அனைவரது முகத்தைப் பார்க்கும்பொழுது எவ்வளவு நன்றாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஸ்தூலத்தில் எவ்வளவுதான் அலங்கரித்தாலும் அனைவரது மாலையும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் ஜொலித்துக் கொண்டிருக்கும் மாலையின் படமானது அனைவருக்கும் மிகவும் பிடித்துள்ளது. தன்னிடம் வைப்பதற்கு தகுதி உடையதாக உள்ளது. பாபாவிடமிருந்து இந்த பரிசை வாங்கிக் கொண்டு செல்லுங்கள். இன்றைய நாளைய பரிசானது அந்த மாலையாகும். ஒவ்வொருவரும் தன்னை அந்த மாதிரி ஜொலித்துக் கொண்டிருக்கும். மாலையினுடைய மணிகளாக புரிந்து கொண்டிருக்கின்றீர்களா? தன்னுடைய கழுத்தில் மாலையின் மணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளோம் என புரிந்து கொண்டிருப்பவர்கள் தானே? அப்படி புரிந்து கொண்டிருப்பவர்கள் கையை உயர்த்துங்கள். ஆஹா! ஆஹா! பாருங்கள் மாலையானது எவ்வளவு அலங்கரிக்கப்பட்டுள்ளதாகத் தென்படுகிறது. மேலும் முக்கியமாக இன்றைய நாளிற்காக பாபா மாலையை உருவாக்கியுள்ளார். உங்களுக்கு கிடைக்கும் தானே? பின்னர் பாருங்கள்

எவ்வளவு ஜொலிக்கின்றன. எனவே முழு ஹாலையும் பாருங்கள் மாலைகள் எவ்வளவு மிக மிக நன்றாக அழகாக அலங்கரிக்கப் பட்டுள்ளது. இப்பொழுது ஒவ்வொரு குழந்தைகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர், என்னுடைய கழுத்தில் இருக்கின்றது தானே! எவ்வளவு பார்க்கின்றீர்களோ அவ்வளவு மாலையானது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மாலைகளை அணிந்துள்ளவர் களின் சபையைப் பார்த்து பாப்தாதா புன்முறுவல் அடைகின்றார். ஆஹா! ஆஹா! மாலாதாரி (மாலையை அணிந்து இருப்பவர்களே), ஆஹா! இந்த நினைவுச்சின்னமானது உங்களுடையதுதான். உங்களுடையது தானே இந்த மாலைகள்? மலர்களுடைய மாலையை அணியுங்கள் அல்லது வேறு எந்த பொருளுடையதை அணிந்திருந்தாலும் அந்த மாலையானது நினைவுச்சின்னமாகும். மேலும் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகின்றது. ஆஹா! அவர்களும் மாலை அணிந்துள்ளார். எனவே, மாலை அணிந்த குழந்தைகளைப் பார்த்து அனைவரும் புன்முறுவல் அடைகின்றனர். மேலும் ஒருநொடியில் அனைவரும் மாலையை அணிந்துள்ளனர் அதைப் பார்க்கும் பொழுது மிகவும் நன்றாக உள்ளது. மாலைகளைப் பார்க்கும்பொழுது மாலையை அணிவிப்பவரின் நினைவு வருகின்றது. இன்று மூக்கியமாக மாலையை அணிந்த குழந்தைகள் இருக்கின்றார்கள். எவ்வாறு மாலையானது நினைவுச்சின்னமாக இருக்கின்றதோ அதே போல் இந்த மாலையும் நினைவுச்சின்னமாக இருக்கும். அனைவரும் எவ்வளவு அழகாக இருக்கின்றீர்கள். அனைவருடைய கழுத்திலும் மாலையானது ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. அனைவருடைய கழுத்தையும் பாருங்கள் எவ்வளவு அழகாக உள்ளது. பாபாவினுடைய மூர்த்தியிலும் மாலை உள்ளது. மாலையானது மிகவும் நல்ல நினைவுச்சின்னம். அனைவரும் எங்கு அமர்ந்துள்ளீர்கள்? ஹாலில். பாபாவின் கழுத்தில் அனைவரும் அமர்ந்துள்ளீர்கள். மாலையைப் பார்த்தீர்கள் தானே! மாலையானது எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றது ஆனால் அடிக்கடி நீங்கள் கீழும் மேலுமாக இருந்தீர்கள் என்றால், மாலையானது எவ்வாறு வெளிக்காட்ட (ஷோ) முடியும். ஆகையால் அனைவரும் இப்பொழுது மாலாதாரியாக மாறி தன்னுடைய சித்திரத்தைப் பாருங்கள். அனைவருடைய கழுத்தும் எவ்வளவு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து மாலைகளும் யாருக்கு அணிவிக்கப்பட்டுள்ளது? பாபாவிற்கு

பாபா சங்கமயுகத்தில் மாலை அணிவதில்லை. பாபா குழந்தைகள் கூடவே மாலை அணிகின்றார். யாருக்காவது மாலை இல்லையென்றால், ஏதாவது மணி தொலைந்து விட்டது என்றால், அவர்கள் தன்னுடைய மாலையினுடைய மணியை (தேடி) எடுத்துச் செல்லுங்கள். இன்று அனைவருடைய கழுத்திலும் ஜொலித்துக் கொண்டிருக்கும் மாலையைப் பார்த்து எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றது. ஆஹா! ஒவ்வொருவரும் மற்றவரின் மாலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் தானே? ஆக அனைவருடைய மனதிலிருந்தும் ஆஹா! ஆஹா! என்று வெளிப்படுகிறது. நல்லது! இப்பொழுது நேரம் ஆகி விட்டது. ஆகையினால் அனைத்து குழந்தைகளையும் மாலாதாரி (மாலையை அணிந்திருக்கும்) குழந்தைகளாக மாற்றி, மாலையில் காண்பித்துள்ளார்.

**சேவையினுடைய முறை ஈஸ்ட்டர்ன் மற்றும் தமிழ்நாட்டை சார்ந்தவர்கள்/ வங்காளம், பீகார், ஒளிசா, அஸ்ஸாம் ஆகிய இடங்களிலிருந்து 15000-பேர் வந்துள்ளனர். மொத்தம் 26000-பேர் வந்துள்ளார்கள்:** அனைவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்து அலங்கரிக்கப்பட்டுவிட்டீர்கள் தானே. ஆஹா பாபா! பார்த்து பார்த்து புன்முறுவல் அடைகின்றார். ஆஹா! குழந்தைகளே ஆஹா! இப்பொழுது அனைவரும் அமர்ந்திருந்து படத்தை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். ஓடி விட வேண்டாம்.

**நேபாளம் (2500-பேர் வந்துள்ளனர்):** மாலையை அணிந்துள்ள ஒவ்வொருவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மாலை எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கிறது மற்றும் எவ்வளவு ஜொலிப்பு உள்ளது. ஒவ்வொரு மாலையினுடைய மணிகளையும் பாருங்கள், எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றது.

**தமிழ்நாடு (3000-பேர் வந்துள்ளனர்):** அனைவருடைய ஜொலிப்பும் நன்றாக உள்ளது, உருவாக்கியதும் நன்றாக உள்ளது. அனைவரும் கையில் பாருங்கள். நாலா பக்கமும் இந்த ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய மாலைகள் எவ்வளவு நன்றாக இருக்கின்றது. அனைவரும் யாராக இருந்தாலும் யாரெல்லாம் இங்கு இருக்கின்றீர்களோ அவர்கள் இங்கு அமர்ந்து உங்களது மாலையின் காட்சியை வெளிப்பாட்டை

வெளிப்படுத்துங்கள். இப்பொழுது அமருங்கள்! அதிகமான அலங்காரம் செய்ய வேண்டாம். எவ்வளவு செய்துள்ளீர்களோ அதை மட்டும் இப்போது காண்பியுங்கள்.

இரட்டை வெளிநாட்டினர் **75**-நாடுகளிலிருந்து **1000**-பேர் வந்துள்ளனர்: இந்த குருப்பில்தான் எல்லாவற்றையும் விட அதிகமாக இரட்டை வெளிநாட்டினர் வந்துள்ளார்கள். எவ்வளவு அழகாக ஜொலிக்கின்றது. ஜொலிப்பைப் பாருங்கள், முழு ஹாலிலும் அதிசயமாக உள்ளது. எவ்வளவு அழகாக உள்ளது. மாலை அணிந்துள்ள அனைவரும் தாங்கள் தன்னுடைய அடையாளமாக தன்னிடம் வைக்க விரும்புகின்றீர்களென்றால், பாப்தாதா அனைவருடைய மாலையின் நினைவுச்சின்னமாக உள்ளங்கையில் வைத்துள்ளீர்கள் என்றால், இது எவ்வளவு ஜொலிக்கின்றது. இப்பொழுதே சொர்க்கத்தில் வந்து விட்டது போல் ஜொலிக்கின்றது. நீங்கள் பாருங்கள் இப்பொழுது தன்னுடைய மாலையை கொஞ்சம் திருப்பிப் பாருங்கள். மற்றவர்களைப் பார்க்க வேண்டாம். தனக்குத் தானே பாருங்கள். எவ்வளவு ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. யாரெல்லாம் இங்கு அமர்ந்துள்ளீர்களோ மாலை அணிவதன் மூலம் நீங்கள் மாறி விடுகின்றீர்கள். நீங்கள் தானே எஜமானர்கள். ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய எஜமானர்கள். இரண்டாவது மாலையும் (மலர்களுடையது) கிடைத்துள்ளது. அதுவும் மிகவும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. மூன்றாவது மாலை-(கழுத்தினுடையது) இதனுடைய மகிமை அனைத்தையும் விட அதிகமானது. இப்பொழுது நீங்கள் வெறுமனே பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கிறீர்கள். பிறகு நேரம் வரும்பொழுது பாபா எழுந்திருக்க வைத்து பார்ப்பார். இப்பொழுது உள்ள மாலைகள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அனைத்தையும் மறைத்து வெறும் மாலைகளால் அலங்கரித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது பாருங்கள் சபை எவ்வளவு அழகாக இருக்கின்றது.

பாப்தாதா தன்னுடைய கைகளினால் கொடியை ஏற்றி **81**வது திருமூர்த்தி சிவஜெயந்தியில் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஓம் சாந்தி! இப்பொழுது இன்று நீங்கள் அனைவரும் ஒன்றாகக் கூடியுள்ளீர்கள் எதற்காக? உங்களுடைய வேலை இங்கு முக்கியமாக என்ன உள்ளது? மாற்றம் அடைவதற்காக. எனவே,

மாற்றம் அடைந்துள்ளீர்களா! இப்பொழுது நீங்கள் எவரெடியாக இருங்கள். செய்ய வேண்டுமா அல்லது முடிந்து விட்டதா? செய்யவில்லையென்றால் சுற்றி வர வேண்டுமா? எனவே, அனைவரும் பாருங்கள், அன்பாக பார்க்கின்றீர்கள் தானே. நிதானமாகப் பார்த்தீர்கள் தானே? முழு வருடத்திற்காகவும் சிவஜெயந்தி வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! இன்றைய நாள் விசேஷமாக கொண்டாடுவதற்கு உண்டான நாளாகும். எனவே, அனைவரும் தனக்குள் இந்த தீபத்தை ஏற்றினீர்களா? கொடியும் ஏற்றினீர்கள். தீபத்தையும் ஏற்றினீர்கள். அனைவருடைய முகத்திலும் ஜொலிப்பு வந்து விட்டது சந்தோஷம் தானே! அனைவருடைய முகத்திலும் சந்தோஷத்தினுடைய ஜொலிப்பு வந்து விட்டது. பின்னாடி இருப்பவர்கள் என்ன புரிந்து கொண்டு இருக்கிறீர்கள். அனைவருடைய மனதிலும் திலாராம் மனதைக் கொள்ளை கொள்பவர் இருக்கின்றார் தானே? ஆக, மனதைக் கொள்ளைக் கொள்பவர், தில்வாலே எவ்வளவு பொருள் வேண்டுமோ அவ்வளவு வந்து விடும் ஆனால் இப்போது வரைக்கும் சங்கம யுகவாசி கற்றுக் கொண்டே இருக்கின்றார்கள். எல்லாம் அறிந்தவர்கள் அல்ல. கற்றுக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் பாபா விரும்புவது என்னவென்றால், ஒரு தடவை பாபா ஓம் சாந்தி என்று சொல்லட்டும் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து விடுவார்கள். எவ்வாறு நம்முடைய இந்த சூரியன், சந்திரன் ஜொலித்துக் கொண்டு அலங்கரித்துக் கொண்டிருக்கின்றதோ பார்த்தீர்கள் தானே! அவ்வளவு நன்றாக அலங்கரித்து இருப்பது கண்களுக்குத் தென்படுகிறது தானே! எனவே, இன்றைய நாளிற்காக அனைவருக்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 20.03.2017 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன் (இதுதான் இந்த கல்பத்தின் இறுதி மிலன்!).

## தனது சாதாரண சொரூபத்தை மாற்றி சிறிது நேரமாவது சங்கமயுகத்தின் பரிஸ்தா சொரூபத்தை அனுபவம் செய்து பாருங்கள். இது உங்களது மிகவும் சிறந்த புன்சிரிப்புடன் பிரகாசிக்கும் சொரூபமாகும்!

ஓம் சாந்தி. இன்று பாப்தாதா விசேஷமாக யோக யுக்த் குழந்தைகள், அனைவரது மத்தியில் யோகம் நிறைந்து விளங்குவதோடு பிறரையும் யோகம் நிறைந்தவர்களாக ஆக்கக்கூடிய அம்மாதிரி குழந்தைகளைப் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அன்பு நிறைந்த உள்ளத்தால் அன்பான நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வளவு அனைத்து குழந்தைகளும் ஒன்றாகச் சேர்ந்து யோகத்தில் அமர்ந்து, யோகத்தில் கூட உன்னத ஸ்திதியில் நடைமுறையில் இருப்பதைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர். எப்படி பாபா பார்த்து, பார்த்து புன்சிரிக்கின்றனரோ அவ்வாறே குழந்தைகளும் பாபாவைப் பார்த்து புன்சிரிக்கின்றனர். மேலும் உள்ளத்தில் குஷியாக நிரம்பி அதற்குப் பதிலும் அளித்துக் கொண்டிருக்கின்றனர். தற்போதைய இந்த சபையின் ஜொலிப்பாக மிகவும் நல்ல புன்சிரித்துக் கொண்டே இருக்கக்கூடிய குழந்தைகளைப் பார்த்து, பார்த்து அவர்களது முகத்தில் அன்பின் பிரகாசம் தெரிவதைக் கண்டு புன்சிரித்துக் கொண்டிருக்கின்றனர் ஆக குழந்தைகள் என்ன செய்து செய்துக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகளும் புன்சிரிக்கின்றனர். பாபாவும் கூறுகிறார். ஆஹா, குழந்தைகளே! ஆஹா!

குழந்தைகளின் புன்சிரிப்பு மற்றும் பாபாவின் புன்சிரிப்பு இரண்டுமாகச் சேர்ந்து மிக அழகாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா என்ன விரும்பினாரோ அதையே நாலா புறங்களிலும் பார்த்து பாபா மகிழ்ச்சியடைகின்றனர். முழு சபையில் தந்தை குழந்தைகள் புன்சிரித்த முகத்தோடு இருப்பதைப் பார்த்து உள்ளப்பூர்மைாக மகிழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆஹா, குழந்தைகளே ஆஹா! மறைவான சக்தி மற்றும் அதனுடைய பிரபாவம் இரண்டும் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் குஷியானது நிறைந்து இருப்பதால் அவர்கள் நன்கு புன்சிரிக்கின்றனர். ஒவ்வொருவருடையடமகிழ்ச்சியான முகத்தையும் பார்த்து எவ்வளவு இனிமையாகப் புன்சிரிக்கின்றனர்.

இன்றைய சபை பெரும்பாலான புன்சிரித்துக் கொண்டிருக்கக்கூடிய, கவலையில்லாத மகாராஜாக்களுடையதாகும். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதே அவர்களது புன்சிரித்த முகமானது மிகவும் அழகாகத் தெரிகிறது. நீங்களும் கூட ஒருவர் மற்றவரை இதே ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா! அனைவரும் ஒருவர் மற்றவரை அம்மாதிரி பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், அதாவது நன்கு தெரிந்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறீர்கள். இன்றைய சபை விசேஷமாக மலர்ந்த முகத்துடன் புன்சிரிப்போடு அதிகமாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது ஏன்? அனைவருடைய மனதிலும் ஒரே ஒரு ஒலி, இனிமையான பாபா, அன்பான பாபா....அனைவரது வாயிலிருந்தும் இந்த வார்த்தைகளே வெளிவருகின்றன. ஓ இனிமையயான பாபா, அன்பான பாபா... இன்று பாபா பல தினங்களுக்குப் பிறகு குழந்தைகளின் இப்படிப்பட்ட சபையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரிடமிருந்தும் இனிமையான பாபா, அன்பான பாபா.. இதே உணர்வு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. கடைசியில் இருக்கக்கூடிய முகம் கூட இன்று இம்மாதிரியே இருக்கின்றனது. ஆக, இன்று எதுவரை இரவில் விழித்துக் கொண்டிருப்பீர்களோ, அது வரை அனைவரும் ஒருவர் மற்றவரை பார்த்து புன்சிரிக்கின்றனர். நீங்கள் ஒவ்வொருவரும் பாபாவின் மற்றும் இந்த சபையில் வீற்றிருக்கும் புன்சிரிப்போடு கூடிய முகங்களையும் பாருங்கள், இந்த மூலையில் பாபா அமர்ந்திருக்கிறார், புன்சிரித்த முகத்தைப் பார்த்து முழு சபையிலும் அதனுடைய

பிரபாவமே சூழ்ந்திருக்கிறது. அவஸ்தா (ஸ்திதி) எப்படி இருப்பினும் ஆனால் அனைவரது முகமும் புன்சிரிப்புடன் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைவரது முகம் அவ்வாறு மலர்ச்சியுடன் இருக்கிறது. ஒரு வினாடியில் முழு சபையும் மாறி விட்டது, யார் எப்படி இருந்தாலும் பாபா அவரை மாற்றி அனைவரது முகமும் ஒரே மாதிரி அவ்வாறு தென்டுகிறது. அனைவரது முகமும் மிகவும் பிரகாசமாக காணப்படுகிறது. ஒவ்வொருவருடைய முகமும் எப்படி பாபாவுடைய வதனத்தில் ஜொலித்துக் கொண்டிருப்பது போன்று தென்படுகிறது. அவ்வாறே இன்று நீங்களும் அப்படிப்பட்ட பிரகாசிக்கின்ற தீபங்களாக காணப்படுகிறீர்கள். பாபா வாயிலிருந்து மிகவும் மெதுவாக பேசிக் கொண்டிருக்கின்றார், என்ன பேசுகிறார்? ஒவ்வொரு குழந்தையும் அவ்வாறு ஜொலித்துக் கொண்டிருக்கக்கூடிய முகம் மற்றும் குணத்தால் எப்படி தற்போது சித்திரத்தில் தென்படுகின்றீர்களோ அவ்வாறே பிரகாசிக்கின்ற நட்சத்திரங்களாக மிகவும் நன்றாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் இந்த பிரகாசிக்கும் நட்சத்திரத்தின் ஜொலிப்பானது மிகவும் அழகாக இருக்கின்றது. ஏன்? ஒவ்வொரு குழந்தையும் தனது பிரகாசிக்கும் முகத்துடன் தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த சித்திரமானது உங்களுடையது ஆனால் இவ்வாறு பிரகாசிக்கின்ற நட்சத்திரம் தற்போது எப்படி இருக்கிறது என்றால் முன்பு எப்படி இருந்ததோ அவ்வாறே தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு வெண்மையான பிரகாசத்துடன் கூடிய, ஆனால் சாதாரண ரூபம் இல்லை ஆனால் பிரகாசிக்கின்ற முகம், அந்த சபை மிகவும் நன்றாக இருக்கிறது. அனைவருமே ஜொலித்துக் கொண்டிருக்கிறீர்கள். எவரும் பிரகாசிக்காமல் இல்லை. ஏனெனில் அனைவரும் பாபாவை பிரகாசமாக இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், அவ்வாறே பாபாவைப் போன்று முழு சபையைம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. பாபா என்ன சொல்கிறாரோ அவ்வாறே முழு சபையும் அமர்ந்திருக்கிறது. அதாவது உண்மையிலேயே மேலிருந்து இறங்கி வந்துள்ள பரிஸ்தாக்கள் இத்தரணியில் வந்து விட்டனர், அது போன்று! இந்த சொரூபமானது உங்களுக்கும் மிகவும் அன்பானதாக இருக்கிறது. ஏனெனில் தற்போது அனைவரும் முழுமையான மூர்த்தி (சிலை) ஆகி விட்டீர்கள். மேலும் குழந்தைகளின் இந்த ரூபமானது பல பேருக்கு காட்சியாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைவருமே மகிழ்ச்சி அடைந்து

கொண்டிருக்கின்றனர். அனைவரும் பரிஸ்தா ரூபத்தில் தங்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். நமக்கும் (தாதிக்கும்) பாபா உங்களை பரிஸ்தா ரூபத்தில் காண்பித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் பூஜிக்கத்தக்க நிலைக்குச் சமமாகத் தென்படுகின்றனர். இப்பொழுது அதிக நேரம் அமர்ந்து கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அனைவருக்கும் சங்கமயுகத்தினுடைய பிரகாசிக்கும் தங்களது சொரூபம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக இந்த பரிஸ்தா ரூபத்தில் ஒரு வினாடியில் எப்படி முன்னால் வெளிப்பட்டீர்களோ, அவ்வாறே பரிஸ்தா ரூபத்தில் இப்பொழுதும் தென்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். முழு சபையும் இங்கே வந்து பாருங்கள், எவ்வளவு மாறி விட்டீர்கள். அத்தனை கிரீடங்களோடு எல்லோரும் எங்கே போவீர்கள்? இப்பொழுது உங்களுக்குள் மறைவான ரூபத்தில் இருக்கிறீர்கள். இதனையே வெளிப்படையான ரூபத்தில் பார்ப்பார்கள். முழு சபையையும் பாருங்கள் எவ்வளவு ஜொலிப்பாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. சிலர் கொஞ்சம் கோணல்மாணலாக இருந்தாலும் அனைவருமே பிரகாசமாகவே இருக்கிறீர்கள், மேலும் ஒவ்வொருவரும் உங்களையேப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறீர்கள். இது பிடித்திருக்கிறதா? இந்த பிரகாசமான உங்களது பரிஸ்தா சொரூபம் பிடித்திருக்கிறது அல்லவா? ஒரே வினாடியில் மிகவும் ஜொலிப்பாக மாறி விட்டீர்கள். முழு சபையையும் பாருங்கள். எப்படி ஜொலிக்கின்றது. உங்களுடைய ஜொலிக்கின்ற ரூபத்தை மிக நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட உங்களது ஜொலிக்கும் சொரூபத்தைப் பார்த்து பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். ஆக இந்த தற்போதைய பிரகாசிக்கும் ரூபம், சிறிது நேரத்திற்காக பாபா வெளிக் கொணர்ந்து காண்பித்தார். அதாவது இவ்வாறான பரிஸ்தாவாகவே நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள்! அதே பரிஸ்தா ரூபத்தில் பாபா உங்கள் அனைவரையும் காண்பித்தார். ஒரே வினாடியில் மாறி விட்டீர்கள். முழு சபையும் நன்கு ஜொலிக்கின்ற ஆடையோடு எவ்வளவு அழகாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. உங்களுடைய முகத்தையே நீங்கள் பாருங்கள், எவ்வளவு அன்பாகத் தென்படுகிறது. ஏனெனில் இது சம்பூரண நிலை (முழுமையான) நிலை அல்லவா! ஆக எவ்வளவு அழகாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது சாதாரண நிலை மாறி பரிஸ்தா ரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? முன்னர் பின்னர் எது

தென்படுகிறது? பரிஸ்தா மற்றும் முழு சபையும் எவ்வளவு பிரகாசமாக, ஜொலிப்பாகக் காணப்படுகிறது. சாதாரண ரூபத்தில் எவருமே இல்லை. அனைவரது ரூபமும் பரிஸ்தாவாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறது ஆனால் (மனதின்) உள்ளே எவருடைய நிலையில் வித்தியாசம் இருந்தாலும், அது அவர்களுக்கேத் தெரியும். அதில் நாம் ஏன் செல்ல வேண்டும் ஆனால் நாமோ நமது பரிஸ்தா சொரூபத்தை முக்கியமாகக் காண்பிக்க வேண்டும். அதுவும் முற்றிலும் பரிஸ்தாவான நிலை ஆகப் பாருங்கள். பரிஸ்தா ரூபத்தில் நீங்கள் மாறும் பொழுது எப்படி சபையே மாறிப் போய் விட்டது. உங்களது பரிஸ்தா சொரூபம் தானாகவே வெளி வந்து விட்டது. உங்களது இந்த பிரகாசமான இந்த சொரூபம் உங்களின் கூடவே இருக்கும். ஆக இந்த பரிஸ்தா சொரூபம் உங்களுடையது, மிகவும் பக்கா (உறுதி) ஆகி விட்டது! நான் பரிஸ்தா சொரூபதாரி, சற்று நேரம் இதே அனுபவத்தை செய்து பாருங்கள். எவ்வளவு இனிமையானது இந்த அனுபவம்!

தற்போது பாபா பரிஸ்தா பவ சொரூபத்தை வெளிப்படுத்துகின்றார். தற்போது ஒரே வினாடியில் பரிஸ்தா, ஒரே வினாடியில் சாதாரண நிலை, இவ்வாறு பயிற்சி செய்து செய்து பரிஸ்தாவாகவே ஆகி விடுவீர்கள். தற்போது பரிஸ்தா சொரூபத்தில் இருங்கள், அதிக நேரம் பரிஸ்தாவாக இருங்கள். இந்த உலகில் பரிஸ்தா ரூபம் இதுவும் கொஞ்ச நேரம் இருக்கும். இந்த பரிஸ்தா சொரூபம் சற்று நேரம் உங்களிடம் கூடவே இருக்கும். நீங்களும் நன்கு அனுபவம் செய்வீர்கள், அதாவது இந்த பரிஸ்தா சொரூபம் எவ்வளவு அற்புதமானது. யார் எவ்வளவு பரிஸ்தா ரூபத்தில் இருக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு சமயம் இருக்க முடியும் ஆனால் அந்த சூட்சும வதனத்தின் பரிஸ்தா ரூபம் தற்போது நமது கையில் இல்லை. இந்த நிலையில் பரிஸ்தாக்களுடைய வாழ்க்கையில் (அனுபவமாக மட்டும்)தான் இருக்கும்.

சேவையின் முறை குஜராத் மற்றும் போபால்: மொத்தம் 24000-பேர் வந்துள்ளனர். அதில் ஆயிரம் பேர் வெளிநாட்டினர் 75-நாடுகளில் வந்துள்ளனர். 13000-பேர் குஜராத், 4000-பேர் போபால்.

மிகவும் நல்லது. முன்னி சகோதரி கூறுகிறார். பாபா இன்று நீங்கள் அனைவரையும் நல்ல முறையில் சந்தித்தீர்கள். சிறப்பான முரளியையும் கூறினீர்கள். அனேகர் உணர்கின்றனர். நமக்கு கடைசியில் கிடைத்திருக்கிறது என்று நினைக்கின்றனர். ஒருவேளை மிகவும் நேரமாகியதோ தெரியவில்லை. எனவே வேக வேகமாக சந்திக்கின்றனர் ஆனால் அப்படியில்லை. நேரத்தைப் பற்றிய விரயம் இங்கு பார்ப்பதில்லை, ஆனால் பாபாவும் காண்பிக்கின்றார், ஒருவேளை மிக தாமதமாக யாரேனும் வந்தால் அவருக்காக காத்திருப்பதுமில்லை. தாதிஜிக்களைத் தவிர! தாதிஜிகளோ அஸ்திவாரமானவர்கள் (ஆதாரமானவர்கள்). நல்லது.

இந்தியா-ஒன், சோலர் திட்டத்தை பாப்தாதா ஆரம்பித்து வைத்தார். என்ன உருவானாலும் சரி, அது யக்ஞத்தில் உருவானது. இதே முறையில் நடத்திக் கொண்டிருங்கள். மற்றபடி அனைத்தும் சரியே!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.04.2017 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீடியோ!! மிலன் நடைபெறவில்லை!

## (ரதம் -குல்ஸார் தாதி -அஹமதாபாத் ஆஸ்பத்திரியில்)

ஆத்மாக்களின் மீது அன்பு செலுத்தக் கூடிய அவ்யக்த பாப்தாதாவின் மிக செல்லமான, மனம் புத்தியை சதா சுத்தமாக மற்றும் தெளிவாக வைத்திருக்கும், அமைதி சக்தியை சேமிப்பு செய்து உலக மாற்றத்திற்கான உயர்ந்த சேவைக்கு நிமித்தமாக இருக்கக் கூடிய, பரமாத்மாவின் பாலனைக்கு அதிகாரியாக இருக்கும் ஆத்மாக்கள், டீச்சர் சகோதரிகள் மற்றும் அனைத்து பிராமண குல பூஷண ஈஸ்வரிய அன்பு நிறைந்த இனிய நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள்! இன்று மதுவனத்தில் அன்பான அவ்யக்த பாப்தாதாவுடன் மங்களகரமான சந்திப்பு செய்வதற்காக மகாராஷ்டிரா மற்றும் முழு பாரதத்திலிருந்து 25-ஆயிரம் சகோதர, சகோதரிகள் மற்றும் அயல் நாட்டினர் பல தேசங்களிலிருந்து 500-சகோதர, சகோதரிகள் மதுவனம், சாந்திவனத்திற்கு வந்திருக்கின்றனர். அனைவரும் மிக நன்றாக தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றனர். இன்று 10'ஆம் தேதி அன்பான அவ்யக்த பாப்தாதா வருகைகளும் நாளாகும் ஆனால் நாடகம் என்றுதான் கூற வேண்டும், நமது மதிப்பிற்குரிய இனிமையிலும் இனிய தாதி குல்ஜார் அவர்களுக்கு மாநாட்டின்போது இன்பெக்ஷன் காரணத்தினால் சுவாசிப்பதற்கு சிறிது சிரமப்பட்டார். அப்போது அவர் அகமதாபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போதிலிருந்து தாதிஜி அகமதாபாத்திலுள்ள ஸ்டெர்லிங் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இப்போது சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் மருத்துவர்கள் அவருக்கு வெளியில் செல்வதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆகையால் தாதிஜி (பாப்தாதாவின் அன்பான ரதம்) இன்று இந்த விசாலமான சபைக்கு வந்து சேர முடியவில்லை ஆனால் தாதிஜி அனைவருக்கும் மிகவும் அன்பு நிறைந்த நினைவுகளை அனுப்பி இருக்கின்றார். இன்று அதிகாலையிலிருந்தே அனைத்து சகோதர, சகோதரிகளும்

விசேஷமாக மனம் மற்றும் வாய் மௌனத்தின் கூடவே அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் மிக நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதா வருகையின் நாளைப் போன்றே முழு தினச்சரியமும் கடைப்பிடிக்கப்பட்டது. மாலையில் யோகா தபஸ்யாவின் கூடவே சகோதரர் சூரஜ் அவர்களின் வகுப்பு மற்றும் பாப்தாதாவின் இனிய போதனைகள் நிறைந்த மகா வாக்கியம் வீடியோ மூலம் காண்பிக்கப்பட்டது. முரளிக்குப் பின் தாதி ஜானகி அவர்கள் அனைவருடனும் இனிய ஆன்மீக உரையாடல் செய்தார். பிறகு அனைவருக்கும் டோலி வழங்கப்பட்டது. எந்த அவ்யக்த மகாவாக்கியங்களை நாம் இங்கு வீடியோ மூலம் கேட்டோமோ அதை உங்களுக்கும் அனுப்பி வைக்கின்றோம். நீங்களும் தங்களது வகுப்பில் புத்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இதுவும் பாப்தாதா நம் அனைவருக்கும் எதிர்பாராமல் நடக்கும் (திடீரென்று, அச்சானக்) பாடத்தை கற்பித்து அவ்யக்த ஸ்திதியின் மூலம் அவ்யக்த சந்திப்பு செய்வதற்கான வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றார். கடந்த 48-ஆண்டுகளாக குழந்தைகளாகிய நாம் அவ்யக்த பாலனை அடைந்திருக்கிறோம். இப்போது அதற்கான நடைமுறை நிரூபணம் மற்றும் சதா ஆடாத, அசையாத நிலையில் நிலைத்திருப்பதற்கான நேரம் இதுவாகும். நல்லது, அனைவருக்கும் அன்பு நினைவுகள்..... ஓம்சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**N.B.:** ரதத்திற்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மும்பையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆதலால் **10.04.2017** முதல் பழைய அவ்யக்த முரளிகளின் வீடியோ காட்சிகளே நடைபெற்றுக் கொண்டுள்ளது.

பாப்தாதாவின் ரதம் குல்ஸார் தாதி (ஹ்ருதய மோகினி) அவர்கள் **11.03.2021,** காலை **8.40'**க்கு, சிவராத்திரி அன்று சரீரத்தை விட்டார். **10.03.2021** அன்று சிவஜெயந்தி மிலன்! மதுபனில் **22.03.2021** அன்று **13'**வது நாள் 'போக்' வைக்கப்பட்டு, வேதாந்தி பெஹன் உடலில் தாதி பிரவேசமாகி திருஷ்டி வழங்கினார்.

குல்ஸார் தாதி - சுருக்கமான அறிமுகம்!

லௌகீக பெயர் - **ஷோபா.** தாதி ஹ்ருதய மோகினி எனும் குல்ஸார் தாதி அவர்கள் இந்த யக்ஞம் ஆரம்பமான போது **1936'**ல் தாதா லேக்ராஜ் அதாவது பிரம்மாபாபாவால் ஆரம்பிக்கப்பட்ட **'**ஓம் நிவாஸ்**'** என்ற உறைவிடப் பள்ளியில் தனது **8'**வது வயதில் சேர்ந்தார். அவர் **1929'**ம் ஆண்டு சிந்து மாகாணம், ஹைதராபாத்தில் (தற்போதைய பாக்கிஸ்தான்) பிறந்தார். தனது **92'**வது வயதில் **11.**மார்ச்**.2021** அன்று தனது ஸ்தூல சரீரத்தை விடுத்து பாபா மடியைச் சேர்ந்தார். **(84-**ஆண்டுகள்**).** சிறு வயது முதலே தியானத்தில் **(trance)** செல்லும் வழக்கம் இருந்தது; அப்போது தான் கண்ட சொர்க்கத்தின் காட்சிகளை உணர்வு நிலைக்குத் திரும்பியதும் அனைவருக்கும் கூறுவது (சந்தேஷ்) ஒரு வழக்கமாக **(1939-to-1950)** இருந்தது. **1950'**ம் ஆண்டு இந்தியா **-**அபு மலைக்கு வந்தவுடன் அவரை பாபா சேவைக்காக பல இடங்களுக்கும், உள்நாடு வெளிநாடுகளுக்கு, அனுப்பினார் மேலும் அவர் மூலம் பல சென்டர்கள் திறக்கப்பட்டது. இதனால் அவரது சந்தேஷி பாகமும் முடிவடைந்தது. **18.**ஜனவரி**.1969** அன்று பிரம்மாபாபா அவ்யக்தம் ஆனது முதல் **2017-**வரை குல்ஸார் தாதி பாப்தாதா வருவதற்கும், நம்மை சந்திப்பதற்கும், முரளி கூறுவதற்கும் ஒரு கருவி ஆனார். இப்போது பாப்தாதாவின் ரதம் என்ற இந்த பாகமும் முடிவடைந்து விட்டது.

"குல்ஜாரின் சிறப்பு, அப்பாவித்தனம் மற்றும் தெளிவான அறிவுத்திறன், சதா இதயத்தில் பாப்தாதாவை சுமப்பவர் மற்றும் செல்லும் இடமெல்லாம் ஆன்மிக நறுமணத்தைப் பரப்புபவர்!" பாப்தாதா

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂